# அடாவடி ஆளுநருக்கு கட்சித் தலைவர்கள் கண்டனம்!

## தமிழக ஆளுநரை பதவி நீக்கம் செய்யவேண்டும்!

### புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி வலியுறுத்தல்!

புதுச்சேரி, ஜன. 8 -

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு மரியாதை கொடுக்காத தமிழக ஆளுநரை, குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று முன்னாள் முதல்வர் நாராயணசாமி வலியுறுத்தி உள்ளார்.

புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி நேற்று அளித்த பேட்டி வருமாறு: -



தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தொடர்ந்து சட்டமன்றத்தில் உரையாற்ற வரும் போது பல காரணங்களை கூறி உரையாற்றாமல் சென்றுள்ளார்.

தற்போதும் அதே நிகழ்வு நடந்துள்ளது. வேண்டும் என்றே தமிழக அரசுக்கும், முதலமைச்சருக்கும், மக்களுக்கும் களங்கம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்கனவேவெளிநடப்பு செய்ய முடிவு செய்து ஆளுநர் ஆர்.என். ரவி வெளியே வந்துள்ளார்.

தேசிய கீதம் பாடப்படவில்லை என்ற ஒரு சாக் போக்கு கூறி வெளியேறியுள்ளார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தமிழக அரசுக்கு ஆளுநர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறார். தமிழக சட்டமன்றத்தையும், தமிழக முதல் அமைச்சரையும், மக்களையும் ஆளுநர் அவமதித்துள்ளார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுக்க தவறிவிட்டார். இதனால் ஆளுநர் ஆர்என். ரவியை பதவியில் இருந்து குடியரசுத் தலைவர் நீக்கி புதிய ஆளுநரை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் முதல்வர் நாராயணசாமி கூறினார்.

## ஆளுநரின் நடவடிக்கை அதிர்ச்சியளிக்கிறது!

### தொல்.திருமாவளவன் எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜன. 8 -

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. சந்தித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

2024ம் ஆண்டுக்கான அண்ணல் அம்பேத்கர் விருதை எங்கள் கட்சியின் பொதுச்செயலாளர் ரவிக்குமாருக்கு தமிழக அரசு அறிவித்துள்ள தற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரை ஆளுநரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஆளுநர் சொல்லும் காரணம் வியப்பாக உள்ளது.

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி நிகழ்ச்சி நிறைவு பெறும்போது தேசிய கீதம் இசைப்பது



தான் தமிழ்நாட்டின் மரபு. இதைத்தான் கடைபிடித்து வருகிறோம்.

ஆளுநரின் போக்கு சட்டமன்ற மரபை அவமதிக்கும் செயல். விசிக சார்பில் தமிழ்நாடு ஆளுநருக்கு கண்டனம் தெரிவிக்கிறோம். அதேபோல் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை விட்டுவிட்டு அரசியல் செய்து ஆதாயம் தேடுவது ஏற்புடையதல்ல. மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எதிராக இருக்கிறது. அதிமுக உள்ளிட்ட கட்சிகள் இதனை தங்களின் ஆதாய நோக்கில் கையாளுவது வருத்தம் அளிக்கிறது.

அண்ணா பல்கலைக் கழகமாணவிவிவகாரத்தில் உடனடியாக குற்றம் சாட்டப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளார். மேலும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இனிமேல் இது குறித்து கேள்வி கேட்க வேண்டும் என்றால் சிறப்பு புலனாய்வுத் துறையிடம் கேள்வி கேட்கலாம். தமிழ்நாடு அரசின் மீதும் தமிழ்நாடு காவல்துறையின் மீதும் திரும்பத் திரும்ப கேள்வி கேட்பது அந்த பெண்ணுக்கு நியாயம் வாங்கி தருவதை விட அரசியல் ஆதாயம் தேடுவதாகத்தான் பார்க்கப்படுகிறது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆளும் கட்சியுடன் இருப்பதினால் எதிர்க்கட்சியைப் போன்று செயல்படாமல் தோழமைக் கட்சியாக தான் இருக்க வேண்டும். அதேபோல மக்கள் பிரச்னையையும் மற்றும் நீதியை கூறுகின்ற கட்சியாகவும் இருக்கிறோம்.

தோழமைக் கட்சிகளாக இருக்கிற எங்களுக்கு எங்களுடைய சுதந்திரம் எப்போதும் இருக்கிறது. எங்கள் சுதந்திரத்தை கூட்டணி என்ற பெயரில் ஆளுங்கட்சி தடுப்பதில்லை. ஆளுநர் தேவையில்லை என்பது எங்கள் நிலைப்பாடு. இந்த ஆளுநர் பரபரப்பு அரசியல் செய்யக் கூடியவராக இருக்கிறார். அந்தப் பொறுப்பில் இருக்கக்கூடிய ஆளுமையாக அவர் இல்லை. அவர் சராசரி அரசியல்வாதியை போல செயல்படுவது அதிர்ச்சி அளிக்கிறது. ஆர்.என்.ரவி போன்ற ஆளுநர்கள் தான் பாஜ கட்சிக்கு தேவைப்படுகிறார்கள். தி.மு.க. ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒட்டு மொத்த அரசாங்கத்திற்கும் நெருக்கடி கொடுக்கிறார்கள்.

இவ்வாறு தொல். திருமாவளவன் எம்.பி. கூறினார்.

### சட்டமன்ற மரபை மதிக்காத

## ஆளுநர் ரவி பதவி விலகவேண்டும்!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 8 -

அரசியலமைப்புச் சட்டத்தையும், தமிழக சட்டமன்ற மரபையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் ஆர்.என். ரவி உடனடியாக பதவி விலக வேண்டும்; ஒன்றிய அரசு அவரை, ஆளுநர் பதவியிலிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: -

**அரசியலமைப்புச் சட்டக் கடமையை மீறும் ஆளுநர்!**

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் உரையுடன் துவங்குவது என்பது கடந்தகால மரபு அடிப்படையில் அரசியல் சாசனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கடமைகளில் ஒன்று. இந்த சட்டப்பூர்வமான கடமையை நிறைவேற்றாமல் இன்று ஆளுநர் வெளிநடப்பு செய்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தமிழ்த்தாய் வாழ்த்து பாடும் மரபை அவமதிப்பதா?**

தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் இசைப்பது தான் மரபு. இந்த மரபை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை காலங்காலமாக பின்பற்றி வருகிறது. இந்த மரபுகளை மதிக்காமலும், ஆளுநருக்கு உள்ள கடமைகளை நிறைவேற்றாமலும் ஒன்றிய பாஜக அரசு விரும்புகிற



படி நடந்து கொள்வதை ஆளுநர் ஆர்.என். ரவி வழக்கமாகக் கொண்டுள்ளார். கடந்த காலங்களிலும் இதே போல் அவர் சட்டமன்றத்திலிருந்து தொடர்ந்து அரசியல் உள்நோக்கத்துடன் வெளிநடப்பு செய்து வந்துள்ளதை தமிழக மக்கள் அறிவார்கள்.

**ஆர்.என். ரவியை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்!**

எனவே, சட்டமன்றத்திலிருந்து வெளி நடப்பு செய்வதையே வாடிக்கையாகவும் தேசிய கீதத்தை அவமதிக்கும் வகையிலும் நடந்து கொண்டுள்ள தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி ஆளுநர் பதவியிலிருந்து வெளியேற வேண்டும். அத்தகைய முடிவை ஆளுநர் எடுக்காவிட்டால் ஒன்றிய அரசு அரசியல் சாசன சட்டத்தை அவமதிக்கும் அவரை உடனடியாக திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டுமென்று சிபிஐ(எம்) தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

தமிழ்நாடு ஆளுநரின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கை யினைக் கண்டித்து அனைத்து ஜனநாயக சக்திகளும் வலுவான கண்டனக் குரலெழுப்பிட முன்வர வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு பெ.சண்முகம் குறிப்பிட்டுள்ளார்.

### ஆளுநர் ரவி

## தமிழ் மக்களின் உணர்வுகளை களங்கப்படுத்துகிறார்!

### ஜவாஹிருல்லா – ஈஸ்வரன் – வேல்முருகன் கண்டனம்!

சென்னை, ஜன. 8 -

ஆளுநர் ரவி "தமிழ் மக்களின் உணர்வுகளை களங்கப்படுத்துகிறார்" என்று மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கூறியதாவது:**



மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிதித் தேவைகளை பெற்று தருவதற்கு முயற்சி எடுக்காத ஆளுநர் ஆர்.என் ரவி, பிரச்சினைகளை திசைத்திருப்ப மீண்டும் மீண்டும் நாட்டுப்பண் விவகாரத்தை முன்னெடுப்பது சட்டமன்ற மரபுகளையும், தமிழக மக்களின் உணர்வுகளை களங்கபடுத்தும் செயலாகும். தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றத்தின் மாண்பை சீர்குலைக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியை குடியரசு தலைவர் தலையிட்டு அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். ஆளுநரின் செயல்பாடுகள் குறித்த நீதிமன்ற தீர்ப்புகளுக்கு விரோதமாக செயல்படும் ஆளுநரின் செயல்களுக்கு வன்மையான கண்டனங் களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

**கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈஸ்வரன் கூறியதாவது:**



தேசிய கீதத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என கூறும் ஆளுநர் ஆர்.என். ரவி சென்றாண்டு நடந்து கொண்ட விதத்தை யாரும் மறக்கவில்லை. தொடர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவி இந்த நிலையை கடை பிடித்தால் தமிழகத்தின் வளர்ச்சி என்பது மிகவும் பாதிக்கக்கூடிய ஒன்றாக மாறி விடும்.

இவ்வாறு கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி தலைவர் ஈஸ்வரன் கூறியுள்ளார்.

**தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் கூறியதாவது:**



தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி இருக்கை முன்பு வந்தவுடன் தமிழ்தாய் வாழ்த்து பாடி முடித்த உடனே, தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இது வன்மையான கண்டனத்திற்குரியது என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

### 'டங்ஸ்டன்' போராட்டம் மோடி அரசுக்கு எதிரானது என்பது கூடத் தெரியாதா?

## சுரங்கம் அமைக்க முயலும், ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பற்றி ஒருவார்த்தை கூட குறிப்பிட்டுவிடாதபடி பார்த்துப் பார்த்து பதிவிடும் பழனிசாமி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டன அறிக்கை!

சென்னை, ஜன.8-

"டங்ஸ்டன் போராட்டம் மோடி அரசுக்கு எதிரானது என்றுகூட தெரியாதவரா பழனிசாமி? சுரங்கம் அமைக்க முயலும் 'ஒன்றிய பாஜக அரசை' ஒரு வார்த்தை கூட குறிப்பிட்டுவிடாதபடி பார்த்து பார்த்து பதிவிட்டுள்ளார் பழனிசாமி" என சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை வருமாறு :

'மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் நடத்திய நடைபயணப் போராட்டத்திற்கு காவல் துறை அனுமதியை மறுத்துள்ளது' என சொல்லியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

டங்ஸ்டன் சுரங்கத்தை எதிர்த்து மதுரை திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள சிக்கம்பட்டி டோல்கேட் பகுதியில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் நடை பயணமாக சென்று தல்லாகுளம் மத்திய தபால் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனால், சிட்டம்பட்டி சுங்கச்சாவடி பகுதியில் போராட்டகாரார்கள் திரண்டனர். அங்கிருந்து நடை பயணம் செல்ல முயன்ற போராட்டக்காரர்களிடம் 'வாகனங்களில் சென்று மத்திய தபால் நிலையத்தில் போராட்டம் நடத்துங்கள்' என போலீஸ் அதிகாரிகள் வலியுறுத்தினர். ஆனால், அதனை போராட்டக்காரர்கள் ஏற்கவில்லை. அவர்களை காவல் துறை தடுத்து நிறுத்தியது. போராட்டம் நடத்த அனுமதி வழங்கிய காவல் துறை, அதற்கு சில கட்டுப்பாடுகளை விதித்தது. அதனைதான், 'காவல் துறை அனுமதியை மறுத்துள்ளது' என இட்டுக்கட்டி பொய் சொல்லியிருக்கிறார் பழனிசாமி.

டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க முயலும் ஒன்றிய அரசுக்கு எதிராக விவசாயிகள் அமைதி வழியில் பேரணி மற்றும் போராட்டம் நடத்த தமிழ்நாடு காவல்துறை அனுமதி வழங்கி உள்ளது. அதோடு விவசாயிகளுக்கு எந்தவித அசம்பாவிதங்களும் நிகழாத வண்ணம் முழுமையான பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் போராட்டத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும் அதை வைத்து, தன் சுயநல அரசியல் வண்டியை ஓட்டலாம் என கழகுபோல காத்திருந்த பழனிசாமிக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. இந்நிலையில் வழக்கம் போல பொய் பெட்டியை திறந்து தமிழ்நாடு அரசு விவசாயிகள் பேரணிக்கு அனுமதியே கொடுக்கவில்லை என விதைக்க ஆரம்பித்துவிட்டார் பொய்ச்சாமி பழனிசாமி முதுகெலும்புள்ள எதிர்க் கட்சி தலைவராக இருந்திருந்தால்



விவசாயிகள் ஒன்றிய அரசுக்கு எதிராக இன்று போராட்டம் நடத்தியதை குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் தனது பதிவில் தப்பித்தவறி கூட டங்கஸ்டன் சுரங்கம் அமைக்க முயலும் 'ஒன்றிய பாஜக அரசை' பற்றி ஒரு வரி அல்ல ஒரு வார்த்தை கூட இடம்பெறாதபடி பார்த்து பார்த்து பதிவிட்டுள்ளார் பழனிசாமி. பழனிசாமியின் வீரம் எல்லாம் அவ்வளவுதான். நாம் அவரை கோழை என்று சொன்னால் குப்புறப்படுத்து அழுவார்!

மோடி அரசை கண்டிக்கும் வகையில்தான் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தல்லாகுளம் மத்திய தபால் நிலையத்தை முற்றுகையிடும் போராட்டத்தை போராட்டக்காரர்கள் முன்னெடுத்தார்கள். இந்த விஷயம் எல்லம் லாவகமாக மறைத்துவிட்டு பொய் முலாம் பூச முற்பட்டிருக்கிறார் பழனிசாமி. ஆனால், அந்த பொய் ஒவ்வொரு முறையும் அம்பலப்பட்டு நிற்கிறது.

மதுரை டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க அனுமதிக்க மாட்டோம் என சொன்னதோடு மட்டுமல்லாது தான் முதலமைச்சராக உள்ளவரை ஒன்றிய அரசு டங்கஸ்டன் சுரங்கம் அமைக்க விட மாட்டேன் என நெஞ்சுரத்தோடு கூறி டங்கஸ்டன் சுரங்க அனுமதிக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானத்தையும் நிறைவேற்றினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆனால் அதிமுகவோ டங்கஸ்டன் சுரங்கம் அமைக்க காரணமான சட்ட திருத்தத்தை ஒன்றிய அரசு மாநிலங்களவையில் கொண்டு வந்த போது வழிய சென்று ஆதரவு கொடுத்து தமிழ்நாட்டு உரிமையை ஒன்றிய அரசின் காலடியில் வைத்து தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்தது. பழனிசாமியின் அந்த துரோகத்தை காலம் உள்ள வரை மக்கள் மறக்கமாட்டார்கள்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடிய அப்பாவி மக்களை கருணையேயின்றி காக்கை குருவிகளை சுடுவது போல சுட்டுக் கொன்ற எடப்பாடி பழனிசாமி, இன்று மக்கள் போராட்டத்திற்கு ஆதரவாக பேசுகிறேன் என நடிப்பது "கொடூர கொலைகாரன் நல்லொழுக்க வகுப்பெடுப்பதற்கு ஒப்பானது.

தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்த ஆளுநரை கண்டிக்க துப்பில்லை, தமிழ்நாட்டுக்கு கல்வி நிதி , வெள்ள நிவாரண நிதி என எந்த நிதியையும் ஒதுக்காத ஒன்றிய அரசை கண்டிக்க வக்கில்லை. துணைவேந்தர் தேடுதல் குழுவை இனி ஆளுநரே நியமிப்பார் என UGC கொடுத்த ஷாக் புத்தியில் ஏறவில்லை. ஆனால், எதிர்க்கட்சி தலைவர் என்ற இருப்பை காட்டிக்கொள்ள மட்டும் ஆளாய் பறக்கிறார். அதிமுகவின் பொது செயலாளர் என்பதையும் மறந்து பாஜக தலைவரைப் போல நடந்து கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டு நலனுக்காக எந்த குரலும் கொடுக்காமல் தனது அரசியல் ஆதாயத்தை மட்டுமே முதன்மையாக கொண்டு பாஜக வோடு கள்ளக் கூட்டணி வைத்து செயல்பட்டு வரும் பழனிசாமிக்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.


இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தமது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாடு ஆளுநர்

## ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும்!

### புதுடெல்லி சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் பதிவு!

புதுடெல்லி, ஜன. 8 -



தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும் என்று புதுடெல்லி சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

புதுடெல்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் யோகேந்திர யாதவ் தனது, சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

'திருவாளர் ஆர்.என்.ரவி வெளியேறியே ஆக வேண்டும். பொது வாழ்விலிருந்து ஓய்வு பெற ஏன் தமிழ்நாடு ஆளுநர் தகுதி பெற்றவராக இருக்கிறார் என்பதற்கு இன்றைய 'தி இந்து' வின் வலுவான தலையங்கம் போதுமானது'

இவ்வாறு யோகேந்திர யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க.வின் ஒருவிதமான

## 'அரசியல் வரப்பிரசாதம்' ஆர்.என்.ரவி!

### இந்து என்.ராம் கருத்து!

சென்னை, ஜன. 8 -



தி.மு.க.வின் 'ஒருவிதமான அரசியல் வரப்பிரசாதமாக' விளங்குகிறார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி என்று இந்து என்.ராம் நையாண்டியாகப் பதிவிட்டுள்ளார்.

இந்து என்.ராம் தனது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, தனது சச்சரவான "குழந்தைத் தனத்தின்" மூலம், தி.மு.க.வுக்கு ஏன் ஒருவித 'அரசியல் வரப்பிரசாதமாக' விளங்குகிறார் என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவாக நிரூபித்துள்ளார்! தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இதை நிதானமாகவும் கருத்துப்பூர்வமாகவும் விளக்குகிறார்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.